# பகுதி 3:

# இறுதி நிலை

*பகுதி 1ல் நாம் நமது தற்போதைய வடிவமைப்பு, மரணத்தின் போது நமக்கு என்ன நடக்கிறது, மற்றும் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட நிலையின் இயல்பு ஆகியவற்றைப் பற்றிப் படித்தோம். பகுதி 2ல் நாம், இயேசு மறுபடியும் வரும்போது நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிப் படித்தோம். இந்தக் கடைசிப் பகுதி, நியாயத்தீர்ப்பின் நாளுக்குப் பின்பு நமது வெகுமதி அல்லது தண்டனையின் இயல்பு மற்றும் கால அளவு பற்றி அக்கறை செலுத்துவதாயிருக்கும். "என்றென்றைக்கும்" என்ற சொற்றொடரினால் அர்த்தப்படுத்தப்படுவது என்ன? நீதிமான் ஆசீர்வதிக்கப்பட்டிருத்தலும், துன்மார்க்கர் தண்டிக்கப்பட்டிருத்தலும் எவ்வளவு காலத்திற்கு இருக்கும்? தேவன் வெளிப்படுத்தியுள்ளவற்றில் துருவி ஆராய்தல்தான் தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு நமக்குள்ள ஒரே வழியாக இருக்கிறது. "எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" (1 கொரி. 2:9-13;* RSV*). வெளிப்படுத்துதல் இல்லையேல் நாம், மனிதனின் இறுதியான நிலை பற்றி முற்றிலும் இருளில் இருக்கின்றோம்.*

*இந்தப் பகுதியில் நாம், நமது இயல்பு நிலையான இந்த அண்டம் மறைந்த பின்பு நமது ஆவிக்குரிய பரிமாணம் பற்றிப் படிப்போம். இங்குதான் அறைகூவல் எழும்புகிறது. ஆவிக்குரிய வட்டாரத்திற்குள் மிகச் சிறிய அளவான காட்சியைக்கூட ஒருக்காலும் கண்டிராத நாம் அந்த வட்டாரத்தை எவ்வாறு புரிந்துகொள்ள இயலும்? தேவன் ஆவிக்குரிய பரிமாணங்களின் இயல்பைப் பற்றிக் கூறுதவற்கு உலகப் பிரகாரமான சொற்றொடர்களையும் அடையாளங்களையும் பயன்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட சொற்றொடராக்கங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளாதபடிக்கு நாம் கவனமாய் இருக்க வேண்டும்.*